1978 மார்ச் 1]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விவாதம் அல்லது கேள்விகள் தனி நபர்களின் சொந்தப் பிரச்சினையையொட்டியதாக இருத்தல் கூடாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து அந்தக் குழுவினுல் நல்ல பலன்கள் கிடைத்து வருவதாகத் தெரிகின்றது. எனவே நிச்சயமாக அதைத் தீவிரப்படுத்துவதற்கும் அதை மேலும் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யும்.

திரு. கே. எஸ். கணபதி : இக்குழு கல்லூரி நிர்வாகத்தில் தலையிட உரிமை பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குழு எந்தச் சட்டத்தின் அடிப்படையிலும் அமைக்கப்பட்டதல்ல. ஆலோசனைக் குழுதான் அது. அதிலே கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள் ஆகியோர்களுடைய பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கின்றார்கள். கல்லூரிகள் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு அது. அந்த முறையில், சட்டங்கள் சொல்லுவதைக் காட்டிலும் இவ்வளவு பேர் பங்குகொண்டுள்ள இக்குழுவின் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும், நல்ல முறையில் மதிக்கப்படும் என்று கருதுகிறேன்.

Nagercoil Co-operative Housing Society.

* 162 *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Nagercoil Co-operative Housing Society has not sanctioned any loan for constructing house for the last two years; and

(*b*) if so, the reason therefore?

நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், கடந்த இரண்டு வருடங்களாக வீடு கட்ட கடன் எதுவும் வழங்க வில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (இ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கடந்த இரண்டு வருடங்களாக வீடு கட்ட புதிதாக கடன் ஏதும் ஒப்பளிக்காவிடினும், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட கடன்களுக்கு 1-7-1975 முதல் 22-10-1977 வரை ரூ. 16-58 லட்சம் வரை பட்டுவாடா செய்துள்ளது.

(முற்பகல் 11-00)

திரு. எம் சங்கரலிங்கம் : அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கத்தின் மூலம் எவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டது என்ற விவரத்தைச் சொன்னார்கள். இவைகள் அனைத்தும் 1975 ஆம் ஆண்டுக்கு முன்னால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்காகக் கொடுக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட புதிய திட்டங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா, அவை ஏற்றுக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சங்கத்தின் புதிய கடன் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததற்குக் காரணம் சங்கங்கள் பட்டுவாடா செய்த கடன் தொகை குறைவு. அவைகள் கேட்ட தொகையோ மிக அதிகம். எனவே எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. 1-7-1975-லிருந்து கடன் கொடுக்க வேண்டாம் என்று உத்திரவு வந்தது. அதற்குப் பின்னால் ரூபாய் 400 லட்சம் கிடைத்த பிறகு, அந்தப் பணத்தை "டிஸ்பர்ஸ்" பண்ணியிருக்கிறோம். அதே நேரத்தில் பாக்கித் தொகையை ரூபாய் 200 லட்சமாகக் குறைத்து விடவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் ரூபாய் 500 லட்சத்திற்குக் குறைக்கப்படவில்லை. எப்படி இருந்தாலும், சென்ற நவம்பரில் ரூபாய் 400 லட்சமும் இந்த ஜனவரியில் ரூபாய் 200 லட்சமும் எல்.ஐ.சி. யிலிருந்து நிதி கிடைத்து கடன் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the recent relaxation regarding the receipt of loan applications by these societies, may I know from the Hon. Minister whether he expects the entire sum of Rupees Six Crores which has been given recently to be disbursed before 31st March, or whether he would be able to carry on the balance amount to the next year?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, we are in a mad hurry to disburse the entire amount.

1978 மார்ச் 1]

THIRU A. R. DAMODARAN: While realising the mad hurry of the Hon. Minister and while recognising that we are also in a hurry to get the amounts from the Co-operative Societies, in view of the fact that a time lag is likely to be there between receipt of application and sanction, which takes two months, will the Government consider any relaxation to have the amount carried forward to next year?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, the valuable suggestion of the hon. Member will also be taken into consideration.

Drinking-Water Facilities in Villages.

* 163 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal for collaboration between the Agriculture Department and the Tamil Nadu Water Supply and Drainage Board in the State, to augment drinking-water facilities in the Villages; and

(*b*) if so, the details thereof ?

கிராமங்களில் குடிநீர் வசதிகள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களில் குடிநீர் வசதிகளை அதிகரிக்க வேளாண்மைத் துறையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் சேர்ந்து செயல்படுவதற்கான செயல் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கபட்டது என்பதைக் குறிக்கும்.]